00070

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்**

**சட்டக்கற்கைகள் திணைக்களம்**

**சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் 04**

**LLU4805/LWU2311 – ஒப்பந்தச் சட்டம்**

**இறுதிப் பரீட்சை 2022 / 2023**

**காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்**

**திகதி : 07 ஏப்ரல் 2024** **நேரம்: பி.ப.01.30 - பி.ப.04.30**

பகுதி I இலிருந்து ஒரு வினாவையும் பகுதி II இலிருந்து நான்கு வினாக்களையும் தெரிவு செய்து, ஐந்து (05) வினாக்களிற்கு விடையளிக்குக.

தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

## பகுதி I

இப்பகுதியிலிருந்து ஒரு (01) வினாவிற்கு மாத்திரம் பதில் அளிக்கவும்.

01. ஒரு முகவராண்மைக்கான ஒப்பந்தமானது முதல்வர் நேரடியாக இன்னொரு நபரை அவரிற்காக / அவளிற்காக செயற்படுமாறு அங்கீகரிக்காத சந்தர்ப்பங்களில் கூட ஏற்படுத்தப்படலாம்.

இத்தகு ஒப்பந்தங்கள் எவ்வாறு எழலாம் என முகவராண்மையின் உருவாக்கம் தொடர்பான சட்டத்துடன் உமது விடையை ஆதாரப்படுத்தி விளக்குக.

(20 புள்ளிகள்)

02. அன்னா என்பவள் பில் என்பவனை வேறு நாடுகளில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு உறைந்த பெரிப்பழங்களை அனுப்புவதற்கு தனது முகவராக நியமித்தாள். அவனது சேவைகளிற்காக அவள் ஒரு மாத சம்பளத்தை வழங்கினாள். முகவராண்மை ஒப்பந்தம் தொடர்பில் பின்வரும் சந்தர்ப்பங்களில் எழும் சட்ட விளைவுகள் குறித்து ஆராய்க.

அ) பில், கெதி என்பவளிடமிருந்து பெரிப்பழங்களிற்கான ஒரு கட்டளையை பெற்று பணத்தை பெற்றுக் கொண்டாலும் அதற்கான பொருட்களை அவன் அனுப்பி வைக்கவில்லை. கெதி அன்னாவிடம் இருந்து பணத்தினை மீளக்கோருகிறாள்.

(06 புள்ளிகள்)

ஆ) பில் ஒரு பெட்டி நிறைந்த பெரிப்பழங்களை டொம் என்பவனிற்கு குளிரூட்டும் வசதிகளின்றி கப்பலொன்றில் அனுப்பியதுடன், அப்பெரிப்பழங்கள் டொம்மினை அடைந்த போது பழுதடைந்திருந்தன.

(06 புள்ளிகள்)

இ) பில் அவனது சேவைகளிற்கான ஊதியத்தை பெறாது இருப்பின் மேலுள்ள அ) மற்றும் ஆ) என்பவற்றின் விடைகள் வேறுபடுமா? உமது விடைக்கான காரணங்களை விளக்குக.

(08 புள்ளிகள்)

## பகுதி – II

**ஏதேனும் நான்கு (04) வினாக்களிற்கு விடையளிக்க.**

03. பின்வரும் ஏதேனும் **இரண்டு (02)** மீது சிறுகுறிப்புகளை எழுதுக.

அ) பராயமடையாதோரால் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தங்கள் (Contracts entered into by minors)

(10 புள்ளிகள்)

ஆ) *in pari delicto potier est conditio defendentis* எனும் முதுரைக்கான விதிவிலக்குகள்

(10 புள்ளிகள்)

இ) *non est factum* எனும் வாதம் (10 புள்ளிகள்)

04. பின்வருவற்றிற்கிடையிலான **வேறுபாடுகளை** விளக்குக.

அ) எதிர்கொடை முனைவு மற்றும் எதிர்முனைவு (Cross offer and counter - offer)

(04 புள்ளிகள்)

ஆ) பெருமளவான நிறைவேற்றம் மற்றும் கேள்வி நிறைவேற்றம் (Substantial performance and tender of performance) (04 புள்ளிகள்)

இ) சாவேது கொடை மற்றும் வாழ்விடை கொடை (*Donatio mortis causa* and *donatio inter vivos*)

(04 புள்ளிகள்)

ஈ) குற்றமுள்ள பிறழ்பகழ்வு மற்றும் குற்றமற்ற பிறழ்பகழ்வு என்பனவற்றிற்கான நிவாரணங்கள் (Remedies for innocent misrepresentation and remedies for fraudulent misrepresentation)

(04 புள்ளிகள்)

உ) நல்லேது மற்றும் பிரதிபயன் (*Justa casua* and consideration) (04 புள்ளிகள்)

(04 x 05 = 20 புள்ளிகள்)

05. பின்வரும் பரிமாற்றங்களில் சட்டவிளைவுகளை ஆராய்க. உமது விடையை தீர்ப்புச்சட்டங்களால் ஆதாரப்படுத்துக.

அ) ஏபிசி & கோ (ABC & Co) எனும் மென்பொருள் உற்பத்திக்கான கம்பனியானது கொழும்பில் அமைந்துள்ளது. தமிந்திறி என்பவள் அக் கம்பனியில் மென்பொருளை விருத்தி செய்வதில் ஈடுபடும் ஒரு மென்பொருள் பொறியியலாளர் ஆவாள். ஏபிசி & கோ (ABC & Co) ஆனது தமிந்திறியின் வேலைக்கான ஒப்பந்தத்தில் அவள் இக்கம்பனியை விட்டு நீங்கிய பின்னர் 3 வருட காலங்களிற்கு உலகில் எங்கும் இதே ஒத்த தாபனத்தில் பணியாற்றுவதை தடை செய்யும் வாசகம் ஒன்றை உள்ளடக்கி இருந்தது.

(08 புள்ளிகள்)

ஆ) “விற்றமின் போ ஹெல்த்” (Vitamins for Health) எனும் கம்பனியானது விற்றமின்களை இலங்கைக்குள் இறக்குமதி செய்கிறது. சுகாதாரத்திற்கான அமைச்சர் இக்கம்பனி அவரது தனிப்பட்ட வங்கிக் கணக்கிற்கு இறக்குமதி செலவில் 10 வீதத்தை செலுத்த இணங்கியுள்ளமையால் மனித பாவனைக்கு பாதுகாப்பனதா என்பதை உறுதி செய்ய தற்போதும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒரு விற்றமினை இறக்குமதி செய்ய இக்கம்பனிக்கு அனுமதியை வழங்கியது.

(06 புள்ளிகள்)

இ) விலைமாதர் விடுதி ஒன்றின் உரிமையாளரான டொரதி என்பவள் அவ்விடுதியில் பாலியல் வேலையாளாக பணிபுரியும் சுவீற்றி என்பவளிற்கு அவளது சேவைகளிற்காக இணங்கியிருந்த தொகையை செலுத்த மறுத்தாள்.

(06 புள்ளிகள்)

06. அ) ஒப்பந்த மீறல் ஒன்று ஆனது எச்சந்தர்ப்பங்களில் ஒரு குற்றமற்ற திறத்தவரை ஒரு ஒப்பந்தத்தை முடிவுறுத்துவதற்கு உரித்தாக்கும் என விளக்குக.

(06 புள்ளிகள்)

ஆ) சோபி என்பவள் ஒரு ஹோட்டல் ஒன்றை கட்டுவதற்கான திட்டமொன்றை மேற்கொண்டுள்ளாள்.இத்திட்டத்திற்காக அவள் மேற்கொண்டுள்ள ஒப்பந்தங்களின் மீதான பின்வரும் சந்தர்ப்பங்களின் சட்ட விளைவுகளை விளக்குக.

i. மொகிதீன் எனும் பிரதானமான ஒரு விநியோகத்தர் சிவப்புக்கடலில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தொடர்ந்து நீண்ட கடற்பாதைகளை பயன்படுத்தும் கப்பல்களுக்கான அதிகரித்த கப்பற் கட்டணங்களின் காரணமாக பொருட்களை கப்பல் மூலம் அனுப்ப மறுக்கிறார்.

(06 புள்ளிகள்)

ii. ஸீபா எனும் ரஷ்யாவில் இருந்து ஹோட்டல்களுக்கான கம்பளத்தை விநியோகிக்க உள்ளவள், சோபி ஏற்கனவே பணம் செலுத்தி இருந்த பொருட்களை தற்போது ரஷ்யா – உக்ரேன் யுத்தத்தின் பின்னர் இலங்கை ரஷ்யாவினுடனான வியாபாரத்தை தடை செய்தமையால் அனுப்ப இயலாதுள்ளது.

(06 புள்ளிகள்)

iii. கமலா எனும் பிரிசித்தமான கட்டிட உட்புற வடிவமைப்பாளர் ஹோட்டல் அறைகளை வடிவமைக்க ஒப்பந்தத்தில் ஈடுபட்டிருந்தாள். அவள் ஒப்பந்த வேலையை ஆரம்பிக்க முன்னர் ஒரு கார் விபத்தில் இறந்தாள்

(02 புள்ளிகள்)

07. நாவல பல்கலைகழகமானது, பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள ஒரு பழைய மூன்று மாடி கட்டிடமொன்றை மீள்சீரமைக்க தீர்மானித்தது. இடப்பற்றாக்குறை காரணமாக இம்மீள்சீரமைப்பு நடைபெறும் போதும் அக்கட்டிடத்தின் மேல் மாடிகளில் பணியாட்கள் தொடர்ந்தும் பணி புரிந்தனர். இதன் விளைவாக கட்டிடத்திற்குள் பல காயங்கள் ஏற்பட்டன. அமந்தா எனும் மாணவர் தனது மேற்பார்வையாளரான விரிவுரையாளரை சந்திக்க வந்தபோது கட்டிடத்தின் வாசலில் இருந்த செங்கல் ஒன்றில் தவறி விழுந்து அவளது கால் முறிந்தது. சமன் எனும் விரிவுரையாளர் மீது ஒரு கட்டை விழுந்து அவரது தலையில் கடுமையான காயங்கள் ஏற்பட்டது. அவரது மடிக்கணினியும் மோசமாக சேதமுற்றது. கட்டுமாண பணியின் போது வெளிவந்த மாசின் காரணமாக பல பணியாட்கள் மார்புசார் தொற்று நோய்களிற்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். பணியாட்கள் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு முறையீடு செய்த போதும் அது கட்டிடத்தின் வாசலில் பின்வரும் ஒரு அறிவித்தல் காணப்படுவதால் தாம் இதற்கு பொறுப்பல்ல என்று வாதிடுகின்றனர்: “இது கட்டுமாணப் பணி ஒன்று நடைபெறும் தளமாகும் இக்கட்டிடத்திற்குள் நுழையும் போது அவதானமாக இருக்கவும். இக்கட்டிடத்திற்குள் இருக்கும் போது ஏதேனும் ஒருவருக்கு ஏற்படும் எவ்வித காயத்திற்கும் அல்லது இழப்பிற்கும் பல்கலைக்கழகம் பொறுப்பாகாது”.

பல்கலைக்கழக நிருவாகத்தின் இந் நிலையுடன் நீர் இணங்குகிறீரா? உமது விடையை பொருத்தமான நியதிச்சட்ட உறுப்புரைகள் தீர்ப்புச்சட்டங்கள் என்பனவற்றால் ஆதாரப்படுத்தி விளக்குக.

(20 புள்ளிகள்)

08. கடந்த வருடங்களில் ஒப்பந்தச் சட்டத்தில் முக்கிய மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. இவை ஒப்பந்தங்கள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன, அவை எவ்விடய பொருட்களை கொண்டுள்ளன மற்றும் ஒப்பந்தமொன்று மீறப்படும் போது கிடைக்கத்தகு நிவாரணங்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

இத்தகு சந்தர்ப்பங்களில் விரிவுபடுத்த படவேண்டிய ஒப்பந்த சட்ட கோட்பாடுகளுள் குறைந்தபட்சம் **நான்கினை (04)** தெரிவு செய்து, எவ்வாறு நடைமுறையிலுள்ள சட்டம் இச்சவால்களுக்கு முகம் கொடுக்க எவ்வாறு வெற்றிகரமாக திருத்தப்பட்டுள்ளது என ஆராய்க. உமது விடையை விளக்க நியதிச்சட்ட உறுப்புரைகள் தீர்ப்புச்சட்டங்கள் நடைமுறை உதாரணங்கள் என்பனவற்றை உபயோகிக்குக.

(20 புள்ளிகள்)

- முழுப்பதிப்புரிமை பெற்றது -